## 2.123 இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என்று ஒருங்கிணைக்கப்பட்ட பணியினை மீண்டும் தனித்தனியாக பிரித்து ஆணை வெளியிடப்பட்டது– இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்வது

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்த (பி) துறை

கடித எண்.3585/பி/2001–1 நாள்.29.1.2001

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – இளநிலை உதவியாளர் – உடன் தட்டச்சர் என்று ஒருங்கிணைக்கப்பட்ட பணியினை மீண்டும் தனித்தனியாக பிரித்து ஆணை வெளியிடப்பட்டது – இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.50, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(பி)துறை நாள்.14.2.95.

2.அரசாணை(நிலை)எண்.174, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(பி)துறை நாள்.8.9.2000.

3. சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் செயலாணைகள் ந.க.எண்.அ2/55937/ 2000 நாள்.9.1.2001.

4.தலைமைச் செயலருக்கு முகவரியிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவரின் நேர்முகக் கடித எண்.2640/தொகுதி நான்கு/ எம்டிசி/2000 நாள்.18.1.2001.

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் என்ற தனித்தனியாக இருந்த இரு பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என்று ஒரே பதவியாக்கப்பட்டது. பின்னர், பார்வை 2ல் காணும் அரசாணையில், இளநிலை உதவியாளருடன் தட்டச்சர் பதவி தோற்றுவித்து வெளியிடப்பட்ட ஆணை அந்நாளிலிருந்து இரத்து செய்யப்பட்டு முன்னர் இருந்தபடி இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியிடங்களை தனித்தனியாக தொடர்ந்து அமுல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது. இளநிலை உதவியாளருடன் தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட 14.2.95 முதல் அப்பணியிடம் ஒழிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்ட நாளான 8.9.2000 க்கு இடைப்பட்ட காலத்தில் இளநிலை உதவியாளருடன் தட்டச்சராக நியமனம் பெற்று அப்பதவியில் வரன்முறைப் படுத்தப்பட்ட நபர்களிடம் அவரவர் விருப்பத்திற்கிணங்க இளநிலை உதவியாளர் அல்லது தட்டச்சர் பதவிகளில் நியமனம் செய்து உரிய பணியிடங்களில் மறு பணிவரன்முறைப்படுத்த துறை தலைவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

2. சிவகங்கை மாவட்டாட்சியர் வருவாய் அலகில் இளநிலை உதவியாளருடன் தட்டச்சர் பதவியில் 1998–99ம் ஆண்டில் காலியிடம் 20 என அறிவிக்கப்பட்டு, தேர்வாணையத்தால் 19 நபர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணியிடத்தில் சேர்ந்த நபர்களில் 17 நபர்கள் பார்வை 2ல் காணும் அரசாணையின் அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரிய விருப்பம் தெரிவித்த நிலையில் மேற்குறித்த பணியிடத்தில் காலியிடம் இல்லையென்று குறிப்பிட்டு அப்பணியாளர்களை வேறு துறைக்கு மறு ஒதுக்கீடு செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு பார்வை 3ல் காணும் தனது செயலாணைகள் மூலம் ஒப்பளிப்பு செய்துள்ளார்.

3. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைத் தலைவர், பார்வை 4ல் காணும் தனது கடிதத்தில், சிவகங்கை மாவட்ட வருவாய் அலகிலிருந்து இளநிலை உதவியாளர் உடன் கலந்த தட்டச்சர் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 15 நபர்களுக்கு திரும்பவும் பணி நியமனம் வழங்க சிவகங்கை மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தும்படியும், இதுவரை இளநிலை உதவியாளர் உடன் கலந்த தட்டச்சர் பணி நியமனம் பெற்றவர்களைத் துறைகளிலோ அல்லது அலகுகளிலோ இளநிலை உதவியாளர் பதவிலேயே பணியமர்த்த வேண்டும் என அறிவுறுத்தி ஆணை வழங்கிட என அரசை கேட்டுள்ளார்.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரின் கருத்து நன்கு பரிசீலிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அனைத்து துறை தலைவர்களுக்கும் கீழ்கண்டவாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

1. ஒரு துறைக்கு தேர்வாணையக் குழுவால் பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி 8.9.2000க்கு முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பதவிக்கான நபர்கள் அரசாணை (நிலை) எண்.174, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பி) துறை நாள்.8.9.2000 இல் வெளியிட்ட ஆணையின்படி தட்டச்சராகவோ / இளநிலை உதவியாளராகவோ தங்களை பணிநியமனம் செய்ய / பணி வரன்முறை செய்ய விருப்பம் தெரிவித்தால், அத்துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள தட்டச்சர் / இளநிலை உதவியாளர் பணியிடங்கள் குறைவாக இருக்கும் பட்சத்தில், தட்டச்சர் பணியிடத்தை இளநிலை உதவியாளர் பணியிடமாகவும், இளநிலை உதவியாளர் பணியிடத்தை தட்டச்சர் பணியிடமாக மாற்றி பணியமர்த்த கருதலாம். இவ்வாறு பணியமர்த்த கருதும்போது அத்துறைக்கென அனுமதிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளின் மொத்தப்பணியிடங்களுக்கு மிகைப்படலாகாது.

2. இவ்வாறு பணியமர்த்தியபின் ஏற்படும் காலியிடங்களை தேவைக்கேற்ப தட்டச்சர் / இளநிலை உதவியாளரைக் கொண்டு நிரப்பிக் கொள்ளலாம். அவ்வாறு மாற்றப்படும் பணியிடங்கள் அத்துறைக்குஅனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மிகைபடுத்தலாகாது. அதற்கேற்ப தேர்வாணையக் குழுவினால் தட்டச்சர் / இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு நபர்களை தேர்வு செய்ய காலியிட மதிப்பீட்டு எண்ணிக்கை அனுப்பப்பட வேண்டும்.

அரசு செயலாளருக்காக

பெறுதல் :

அனைத்து துறைகள்